# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 161/2019

## Deposition of Witness for : PW.1

**Name** : திரு. சுப்பிரமணி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பொரிக்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி சத்தியராஜ் எனது மகன், சாட்சி வாசுதேவன், வரதராஜ், குப்பன், சின்னதம்பி, பழனி, ராமகிருஷ்ணன் ஆகியோர்களை தெரியும், ஆஜர் எதிரிகளை தெரியும். எனது சித்தியின் பிள்ளைகள். எனது மனைவி பெயர் சித்ரா, ராஜாம்பாள் எனது தாயார், சின்னதம்பி என் தகப்பனார். எனது தந்தை, என் தாயார் இறப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். என் அம்மா ராஜாம்பாளை நான் தான் பராமரித்து வந்தேன். எல்லம்மாள் என் தங்கை. கட்டியான்பிள்ளை, 2ம் எதிரி தவமணியின் அப்பா. 18.6.2017 அன்று காலை 8 மணியளவில் எதிரிகள் அனைவரும், எதிரிகளுக்கும், எங்களுக்கும் உண்டான பொது இடத்தில் இருந்த வேப்பமரத்தை வெட்டிக்கொண்டு இருந்தார்கள். இந்த தகவலை என் மகன் சத்தியராஜ் எங்களிடம் வந்து சொன்னார். உடனே நானும், என் தாயார் ராஜாம்பாள், சத்தியராஜ் மற்றும் வரதராஜ் ஆகியோர் அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது சத்தியமூர்த்தி, தனசேகர், தவமணி மரத்தை வெட்டிக்கொண்டு இருந்தார்கள். நாங்கள் போய் தடுத்து நிறுத்தினோம். அப்போது தவமணியும், ராஜசேகரும் எங்களை அடிக்கும்படியும் என்ன வந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். தனசேகர் வெட்டுங்கடா பார்த்துக்கொள்ளலாம் என்றும், தனசேகரும், தவமணியும் அசிங்கமான வார்தைகளால் திட்டி அடிங்கடா பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். உடனே ராஜசேகர்(இளம் குற்றவாளி) வெட்டிப்போட்டிருந்த வேப்பமரத்தின் தடியை எடுத்து என் தாயார் ராஜாம்பாள் நடுமண்டையில் ஓங்கி அடித்தார். பிறகு சத்தியமூர்த்தி என் மகன் சத்தியராஜை

அங்கிருந்த கொம்பை கொண்டு என் மகனின் தலையில் ஓங்கி அடித்தார். 2,3 எதிரிகள் என் தாயரை கையாலும், காலாலும் எட்டி உதைத்தார்கள் மற்றும் அடித்தார்கள். அதனால் எனது தாயார் மயங்கி கீழே விழுந்துவிட்டார். அப்போது வரதராஜன், வாசுதேவன் அங்கு இருந்து பார்த்து தடுத்தார்கள். மேலும் குப்பன், பொன்னுரங்கன் அகியோர் வந்தார்கள். உடனே எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பிறகு என் தாயரையும், என் மகனையும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தேன். பின்பு நான் வெறையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1. 19ந் தேதி காலை 5 மணிக்கு என் தாயார் சிகிச்சை பலனிற்றி இறந்து விட்டார். பிறகு என் தாயாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் ஒப்படைத்தார்கள். என் தாயாரின் பிரேதத்தை குல வழக்கப்படி அடக்கம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் தடி 1ம் எதிரி என் மகன் சத்தியராஜை அடித்தார். அந்த தடி சா.பொ.1. என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை

ஒம்/- சுப்பிரமணி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 161/2019**

**Deposition of Witness for : PW.2**

**Name** : திரு. சத்தியராஜ்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2021.**

முதல் விசாரணை -

நான் தற்போது பொரிக்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா, சாட்சிகள் வாசுதேவன், வரதராஜ், குப்பன் ஆகியோர் என் ஊர்காரர்கள். சாட்சி சின்னதம்பி எனது தாத்தா, சாட்சி பழனி, ராமகிருஷ்ணன், கார்த்தி ஆகியோர்களை தெரியும், ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பாட்டியின் பெயர் ராஜாம்பாள். 18.6.2017 ந் தேதி காலை 8 மணியளவில் ஆஜர் எதிரிகள் கிணற்று மேட்டில் உள்ள எங்களுக்கும், எதிரிகளுக்கும் பொதுவான இடத்தில் உள்ள வேப்ப மரத்தை எதிரிகள் வெட்டிக்கொண்டு இருந்தார்கள். எனவே நானும், எனது பாட்டியும், என் தகப்பனார் அ.சா.1ம் அங்கு சென்றோம். பொதுவான இடத்தில் உள்ள வேப்ப மரத்தை வெட்டிவேண்டாம் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று எதிரிகளிடம் சொன்னதற்கு, போடா தேவிடியா மக்களா நாங்கள் அப்படி தான் வெட்டிவோம் என்று சொல்லி எங்களை மிரட்டினார்கள். நாங்கள் சொல்லியும் எதிரிகள் கேட்காமல் எதிரிகள் வெட்டிக்கொண்டு இருந்ததால் தடுக்க போன என் பாட்டியை ராஜசேகர் (இளம் குற்றவாளி) அங்கிருந்த தடியை எடுத்து என் பாட்டியின் நடுமண்டையில் அடித்தார். அப்போது நான் தடுக்க சென்றபோது 1ம் எதிரி தடியால் மண்டையில் அடித்தார். 2,3 எதிரிகள் என் பாட்டியை மிரட்டினார்கள் அப்போது அங்கிருந்த பொன்னுரங்கம், வாசுதேவன், குப்பன் ஆகியோர் தடுக்க வந்தார்கள். அப்போது எதிரிகள் அவர்களை தடியை வைத்து மிரட்டியதால் அவர்கள் பயந்து கொண்டு ஒதுங்கிக்கொண்டார்கள். என் பாட்டி மயங்கி விழுந்து விட்டார். 2,3 எதிரிகள் என் பாட்டியை கையாலும், காலாலும் அடித்து உதைத்தார்கள். பிறகு கூச்சல் போடவே

அங்கம்பக்கத்தில் உள்ளவர்கள் நிறையபேர் ஓடிவருவதை பார்த்து எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பிறகு நாங்கள் எனது பாட்டியுடன் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு நான் தனியாக மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். பாட்டி ராஜாம்பாளை மருத்துவமனையில் அட்மிட் செய்தார்கள். மறுநாள் காலை என் பாட்டி ராஜாம்பாள் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். பிறகு வெறையூர் காவல் நிலையத்தில் என் தகப்பனார் புகார் கொடுத்தார். போலீசார் அது சம்மந்தமாக வந்து விசாரித்தார்கள். சா.பொ.1 ல் தான் 1ம் எதிரி என்னை அடித்தார். மற்றொரு தடியை கொண்டு தான் என் பாட்டியை ராஜசேகர் அடித்தார். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை

ஒம்/- சத்தியராஜ்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.